பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**31 01 2026 SATURDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்திய — அரபு நாட்டு மக்களுக்கு இடையே நீண்டகால பிணைப்பு நிலவி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தீவிரவாதத்தை ஒருபோதும் அனுமதிப்பதில்லை என்ற கொள்கையை உலகளாவிய விதிமுறையாக பின்பற்ற வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

3. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான அடித்தளத்தை இளைய சமுதாயத்தினர் உருவாக்கித் தருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

4. மகாராஷ்டிரா துணை முதலமைச்சராக மறைந்த அஜித் பவாரின் மனைவி திருமதி **Sunetra Pawar** இன்று பதவியேற்றுக் கொண்டார்.

5. ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் போட்டியில் கஜகஸ்தானின் **Elena Rybakina** பட்டம் வென்றார்.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

இந்திய — அரபு நாட்டு மக்களுக்கு இடையே நீண்டகால பிணைப்பு நிலவி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெறும் இரண்டாவது இந்திய — அரபு வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டையொட்டி அந்நாடுகளின் அமைச்சர்களை சந்தித்த பிரதமர், இருநாட்டு மக்களுக்கும் இடையிலான தொடர்புகள் இருதரப்பு உறவுகளை பல ஆண்டுகளாக வலுப்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

அரபு நாடுகளுடன் வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, தொழில்நுட்பம், மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை மேலும் அதிகரிக்க இந்தியா திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாலஸ்தீனத்தில் அமைதியை நிலைநாட்ட மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவு அளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

காஸா அமைதிக்கான திட்டத்தையும் வரவேற்பதாக அவர் கூறினார்.

மண்டல அளவில் அமைதியையும், அரசியல் நிலைபாட்டையும் உறுதி செய்வதற்கு அரபு நாடுகள் மேற்கொண்டுவரும் முயற்சிகள்

மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை என்றும், அதனை தாம் பாராட்டுவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தீவிரவாதத்தை ஒருபோதும் அனுமதிப்பதில்லை என்ற கொள்கையை உலகளாவிய விதிமுறையாக பின்பற்ற வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இரண்டாவது இந்தியா — அரபு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் பேசிய அவர், தீவிரவாதம் எந்த வடிவில் இருந்தாலும் இந்தியாவுக்கும், அரபு நாடுகளுக்கும் பொதுவான அச்சுறுத்தலாகவே உள்ளது என்றும் கூறினார்.

எல்லைதாண்டிய பயங்கரவாதத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறிய அவர், சர்வதேச உறவுகள் மற்றும் தூதரக நடைமுறைகள் மற்றும் கொள்கைகளுக்கு எதிராக எல்லை தாண்டிய பயங்கரவாதம் உள்ளது என்றும் தெரிவித்தார்.

குறிப்பிட்ட சமூகங்கள் மீதான தாக்குதலை தீவிரவாதக் குழுக்கள் நடத்தி வருவதாக கூறிய அவர், பொதுமக்கள் இதுபோன்ற தாக்குதலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு முழு உரிமையும் உள்ளதாக குறிப்பிட்டார்.

இந்தியா போன்ற நாடுகள் இதுபோன்ற சவால்களை சந்தித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தீவிரவாதத்தை முடிவுக்கு கொண்டுவர சர்வதேச அளவிலான ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவுக்கும், அரபு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு நெடுங்காலம் வேரூன்றி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

அரசியல், பொருளாதாரம், தொழில்நுட்பம் போன்றவற்றில் ஏற்படும் உலகளாவிய மாற்றங்களுக்கு ஏற்ப இந்தியாவும், அரபு நாடுகளும் செயல்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மேற்காசிய நாடுகளில் கடந்த சில ஆண்டுகளாக பெரிய அளவில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதாக அவர் கூறினார்.

காஸாவில் நடைபெற்றுவரும் அரசியல் சூழ்நிலை, சர்வதேச சமுதாயத்தை திரும்பிப் பார்க்க வைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

காஸா போரை முடிவுக்கு கொண்டுவர மேற்கொள்ளப்பட்டுவரும் ஒட்டுமொத்த செயல் திட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

காஸாவில் அமைதியை நிலைநாட்டுவதற்கான திட்டத்தை முழுமையாக செயல்பாட்டுக்கு கொண்டுவருவதற்கு உலகின் பல நாடுகள் தங்களது வெளியுறவுக் கொள்கையில் ஆதரவு தெரிவித்துள்ளதையும் டாக்டர் ஜெய்சங்கர் சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி சமூகங்களுக்கு இடையே பிளவை ஏற்படுத்துவதாக பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

**Bagbogra-**வில் நடைபெற்ற பிஜேபி பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினர் மற்றும் அம்மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜியின் செயல்பாடுகள் மாநிலத்தை அனைத்துத் துறைகளிலும் வலுவிழக்கச் செய்து வருவதாக குறிப்பிட்டார்.

முன்னதாக, பாரக்பூரில் நடைபெற்ற தொழிலாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர், மட்டுவா மற்றும் நாமசூத்ரா சமூக மக்களை அம்மாநில அரசு அச்சுறுத்துவதாக கூறினார்.

இந்த இரு சமூகத்தினரும் அச்சுறுத்தல்களுக்கு பயப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

இம்மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கு மாநில அரசு எதிர்ப்பு தெரிவித்துவரும் நிலையிலும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

மேற்குவங்க மாநிலத்தின் எல்லைப்பகுதியில் தடுப்பு வேலி அமைக்கும் பணிகளுக்கு அம்மாநில அரசு ஒத்துழைப்பு தரவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

நாசிராபாதில் ஏற்பட்ட தீ விபத்தில் 27 பேர் உயிரிழந்தது தொடர்பாக, முறையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

தற்போது ஆட்சியில் உள்ள கட்சியை சேர்ந்தவர்கள் ஊழலில் ஈடுபடுவதால், இதுபோன்ற சம்பவங்கள் நிகழ்வதாகவும் அவர் கூறினார்.

மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி, முறையான ஆட்சியை நடத்தாமல், வாக்கு வங்கி அரசியலிலேயே அதிக கவனம் செலுத்துவதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான அடித்தளத்தை இளைய சமுதாயத்தினர் உருவாக்கித் தருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

புதுதில்லியில், தனியார் பள்ளி ஆண்டு விழாவையொட்டி தம்மை சந்தித்த மாணவர்களிடம் உரையாடிய அவர், எதிர்கால இந்தியாவை உருவாக்குவதற்கான சிந்தனையை இளம் வயதிலேயே மாணவர்களிடம் இருப்பதை காண முடிவதாக தெரிவித்தார்.

மாணவர்கள் திறமை மிக்கவர்களாகவும், ஒழுக்கத்துடனும், எழுச்சியுடனும் காணப்படுவது தமக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாகவும் டாக்டர் எல். முருகன் கூறினார்.

<<<<<<>>>>>>

மகாராஷ்டிரா துணை முதலமைச்சராக மாநிலங்களவை உறுப்பினர் திருமதி **Sunetra Pawar** இன்று பதவியேற்றுக்கொண்டார்.

மும்பையில் உள்ள மக்கள் மாளிகையில் நடைபெற்ற விழாவில், அம்மாநில ஆளுநர் திரு ஆச்சாரியா தேவ்ரத், அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில், அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ், துணை முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

துணை முதலமைச்சராக இருந்த அஜித் பவார், விமான விபத்தில் உயிரிழந்ததையடுத்து, அவரது மனைவி திருமதி **Sunetra Pawar,** தேசியவாத காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில்,

சட்டமன்ற கட்சித்தலைவராக அவர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதனிடையே, மகாராஷ்ட்ரா துணை முதலமைச்சராக பதவியேற்றுக்கொண்ட திருமதி **Sunetra Pawar**-க்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், அம்மாநில மக்களின் நலனுக்காக அவர் அயராது பாடுபடுவார் என்றும், மறைந்த அஜித் பவாரின் தொலைநோக்கு பார்வையை அவர் நிறைவேற்றுவார் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

மத்திய பட்ஜெட் நாளை வெளியாக உள்ள நிலையில், பல்வேறு தரப்பினர் இடையே எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ளது.

தமிழகத்தின் கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த கல்லூரி மாணவி ஸ்ரீரக்ஷா, உயர்கல்வி பயில்வதற்கு அரசின் சார்பில், பல சலுகைகள் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்ப்பதாக கூறினார்.

***(Sound Byte — ஸ்ரீரக்ஷா — 38 Sec.)***

<<<<<<>>>>>>

காஸா மீது இஸ்ரேல் படைகள் இன்று நடத்திய தாக்குதலில் **23** பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக காஸா மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த அக்டோபர் மாதம் சண்டை நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பிறகு இந்த தாக்குதலில் அதிகம் பேர் உயிரிழந்திருப்பதாக மருத்துவமனையினர் தெரிவித்தனர்.

ஹமாஸ் துருப்புகள் சண்டை நிறுத்தத்தை மீறியதாக இஸ்ரேல் குற்றம் சாட்டிய ஒரு நாளில், இஸ்ரேல் இந்த தாக்குதலை நடத்தியுள்ளது.

இதில் இரண்டு பெண்கள் மற்றும் ஆறு குழந்தைகள் கொல்லப்பட்டனர்.

ஷிஃபா மருத்துவமனையின் அதிகாரி முகமத் அபு செல்மியா, காஸா நகரில் உள்ள காவல் நிலையத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் **11** பேர் உயிரிழந்ததாக தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் போட்டியில் கஜகஸ்தானின் **Elena Rybakina** பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், **6-4, 4-6, 6-4** என்ற செட் கணக்கில், பெலாரசின் **Sabalenka** -வை வென்றார்.

--------------

பக்ரைன் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி — ஆஸ்திரியாவின் **Nail Oberleitner** இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, **7-6, 6-4** என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Vasil Kirkov** — நெதர்லாந்தின் **Bart Stevens** இணையை வென்றது.

------------------

மும்பையில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் மகளிர் டென்னிஸ் போட்டியின் இந்தியாவின் அங்கிதா ரெய்னா தகுதி சுற்று முதல் ஆட்டத்தில் வெற்றிபெற்றுள்ளார்.

--------------------

நியூசிலாந்துக்கு எதிரான **5**வது மற்றும் இறுதி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை **4.3** ஓவரில் **2** விக்கெட் இழப்பிற்கு **47** ரன் எடுத்துள்ளது.

திருவனந்தபுரத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

-------------

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில், மூன்றாம் நாளான இன்று பரோடா அணிக்கு எதிரான ஆட்டத்தில் தமிழக அணி முதல் இன்னிங்சில் ஆட்டநேர இறுதியில், 7 விக்கெட் இழப்பிற்கு 411 ரன் எடுத்துள்ளது.

சேலத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், பரோடா அணி முதல் இன்னிங்சில் 375 ரன் எடுத்துள்ளது.

<<<<<<END>>>>>>